# 2

# லூக்கா நற்செய்தியின் பின்னணி

ஒரு திறமையான நூலாசிரியர் தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்ற அதற்குத் தேவையான செய்திகளையும், நிகழ்வுகளையும் ஆராய்ந்து தொகுத்து வழங்குவார். பொதுவாக இவ்வகையில் உருவாக்கப்படும் நூல் திறமையான ஆக்கமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. திறமையான நூலாசிரியரான தூய லூக்காவும் நற்செய்தியை எழுதுகையில் தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இம்முறையைக் கையாண்டுள்ளார்.

எல்லா மக்களினதும் மீட்பைப் பற்றிப் பேசும் இவர், அந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்காக தெரிந்தெடுத்த விடயங்களை மிகவும் திறமையாகவும், ஆக்கபூர்வமானதாகவும் முன்வைத்திருக்கின்றார் என்பது, அவரது நற்செய்தி நூலைப் படிக்கும்போது தெளிவாகிறது.

இயேசு பெற்றுத் தந்த மீட்பு தெரிந்தெடுக்கப்பட்ட இனமாகிய யூதர்களுக்கு மட்டுமல்ல, முழு மனித குலத்திற்கும் உரியது என்பதனை வெளிப்படுத்த, இயேசு வின் வாழ்க்கை அவரது போதனை, செயல்கள் பற்றிய விபரங்களை லூக்கா தெரிவு செய்துள்ளார். அதன்படி இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல, மனுக்குலம் முழுவதற்கும் மீட்பர் என்று வெளிப்படுத்துவதே லூக்கா தமது நற்செய்தியை எழுதியதன் நோக்கமாகும். இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்திக் காட்ட லூக்கா பல விடயங்களைப் பயன்படுத்திய விதம் கீழே தரப்பட்டுள்ளது.

1. தூய மத்தேயு இயேசுகிறிஸ்துவின் தலைமுறையை குலமுதுவர் ஆபிரகாமிலிருந்து ஆரம்பிக்கிறார். அவரே யூத இனத்தின் தொடக்கமானவர். ஆபிரகாமின் மகனும், தாவீதின் மகனுமான இயேசுகிறிஸ்துவின் மூதாதையர் பட்டியல் (மத்தேயு 1 : 1). ஆனால் லூக்கா நற்செய்தியில் முதல் மனிதனாகிய ஆதாமிலிருந்தே இயேசுவின் தலைமுறை ஆரம்பமாகிறது.

(லூக்கா 3 : 23 - 28)

2. இயேசுகிறிஸ்து பிறந்தபொழுது விண்ணகத்தூதர் பேரணி ''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக''. என்று கடவுளைப் புகழ்ந்து பாடியது (லூக்கா 2 : 14). இங்கு உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உரித்தாகுக என்று கூறியதிலிருந்து இயேசு கிறிஸ்துவே அனைத்துலக மீட்பர் என வெளிப்படுத்தப்படுகின்றது.

3. மோசேயின் சட்டப்படி ஒவ்வொரு தலைச்சன் ஆண்குழந்தையும் இறைவனுக்கு ஆலயத்தில் அர்ப்பணிக்கப்பட வேண்டும். தூய யோசேப்பும், தூய அன்னை மரியாவும் குழந்தை இயேசுவை காணிக்கையாக்க ஜெருசலேம் ஆலயத்திற்கு கொண்டு வந்தனர். இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட மீட்பைக் காணுவதற்கு ஆசையாயிருந்த நேர்மையாளரும், இறைப்பற்றுடையவரும் இஸ்ரயேல் இறைவாக்கினருமான சிமியோன் குழந்தை இயேசுவைக் கையில் ஏந்திக் கொண்டு கடவுளைப் போற்றி ''மக்கள் அனைவரும் காணுமாறு நீர் ஏற்படுத்தின உமது மீட்பை என் கண்கள் கண்டு கொண்டன. இம்மீட்பே பிறவினத்தவருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி, இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை'' என்றார். இதனால் இயேசு முழு உலகிற்கும் ஒளியும் மீட்புமானார் என்பது தெளிவாகின்றது.

(லூக்கா 2 : 30 - 32)

4. ''எனது அயலான் யார்?'' என்று சட்ட அறிஞர் ஒருவர் (மோசேயின் சட்டத்தை விளக்குபவர்) ஆண்டவர் இயேசுவிடம் வினவினார். அதற்கு இயேசு பின்வரும் உவமையைக் கூறினார்.

திருச்சட்ட அறிஞர் ஒருவர் எழுந்து, அவரைச் சோதிக்கும் நோக்குடன் ‘‘போதகரே நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?’’ என்று கேட்டார். அதற்கு இயேசு ‘‘திருச்சட்ட நூலில் என்ன எழுதியிருக்கிறது? அதில் நீர் என்ன வாசிக்கிறீர்?’’ என்று அவரிடம் கேட்டார். அவர் மறுமொழியாக ‘‘ உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன் மீது நீ அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக என்று எழுதியுள்ளது’’ என்றார்.

இயேசு ‘‘சரியாய்ச் சொன்னீர், அப்படியே செய்யும் அப்பொழுது வாழ்வீர் என்றார். அவர் தம்மை நேர்மையாளர் எனக் காட்ட விரும்பி ‘‘எனக்கு அடுத்திருப்பவர் யார்?’’ என்று இயேசுவிடம் கேட்டார். அதற்கு அவர் மறுமொழியாக கூறிய உவமை ‘‘ஒருவர் எருசேலமிலிருந்து எரிகோவிற்குப் போகும்போது கள்வர் கையில் அகப்பட்டார். அவருடைய ஆடைகளை அவர்கள் உரிந்துக் கொண்டு, அவரை அடித்துக் குற்றுயிராக விட்டுப்போனார்கள். குரு ஒருவர் தற்செயலாய் அவ்வழியே வந்தார். அவர் அவரைக் கண்டதும் மறுபக்கமாக விலகிச் சென்றார். அவ்வாறே லேவியர் ஒருவரும் அவ்விடத்திற்கு வந்து அவரைக் கண்டதும் மறுபக்கமாய் விலகிச் சென்றார். ஆனால் அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது அவர்மீது பரிவு கொண்டார். அவர் அவரை அணுகி காயங்களில் திராட்சை மதுவும் எண்ணையும் வார்த்து, அவற்றைக் கட்டி, தாம் பயணம் செய்த விலங்கின் மீது ஏற்றி, ஒரு சாவடிக்குக் கொண்டு போய் அவரைக் கவனித்துக் கொண்டார்.

மறுநாள் இரு தெனாரியத்தை எடுத்து, சாவடிப் பொறுப்பாளரிடம் கொடுத்து, ‘இவரைக் கவனித்துக் கொள்ளும், இதற்கு மேல் செலவானால் நான் திரும்பி வரும்போது உமக்குத் தருவேன்’ என்றார். ‘‘கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகின்றது?’’ என்று இயேசு கேட்டார். அதற்குத் திருச்சட்ட அறிஞர், ‘அவருக்கு இரக்கம் காட்டியவரே’ என்றார். இயேசு ‘நீரும் போய் அப்படியே செய்யும்’ என்று கூறினார்.

(லூக்கா 10 : 25 - 37)

சமாரியர் என்போர் யூதர் அல்லாத பிறவினத்தார். நல்ல சமாரியனுடைய உவமையில் யூத இனத்தவரல்லாத பிறவினத்தவரான சமாரியர் மதிக்கப்படுகின்றனர்.

லூக்கா நற்செய்தி கி.பி 80 - 85 ற்குள் எழுதப்பட்டதாக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தூய லூக்கா எழுதிய நற்செய்தியினூடாக தனது நோக்கத்தை நிறைவேற்றியது போல, எமது வாழ்வின் இறுதி நோக்கம் இறைவனை நெருங்கிச் செல்வதே. இதனை விளங்கிக் கொண்டு அதற்கேற்ப வாழ வேண்டும். சிறு வயதிலிருந்தே நல்லநோக்கத்துடன் செயற்பட்டு, விவேகத்தோடு அந்த நோக்கத்தை அடைவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இப்படிச் செய்தால் பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களினது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியும்.

இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் ஊடாக அனைத்துலகிற்கும் மீட்புக் கிடைத்தது. நாமும் நம் குடும்பத்துக்கும் பங்குக்கு மட்டுமன்றி எல்லோரின் நலனுக்காகவும் செயற்படுவோம்.

**செயற்பாடு**

1. தூய லூக்கா நற்செய்தியின் நோக்கத்தை மனனஞ் செய்து பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.

2. தூய லூக்கா தம் நற்செய்தியில் அவரது நோக்கத்தை நிறைவேற்றினார் என்பதற்கு 2 உதாரணங்கள் தருக.

**வாழ்க்கைக்கு**

உங்கள் வாழ்க்கையின் நல்ல நோக்கம் எதுவென்று சிந்தித்து அதை நிறைவேற்ற முயற்சி செய்யுங்கள்.